# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**NALANDHA**
**INNOVATION SCHOOL**
a synonym of education
**CUMBUM | THENI DT. 9842121539 | 9659599133 | 9659599144**

**தயார் செய்தவர்: C.ராதிகா M.A.,B.Ed.**

அன்பு மாணவர்களுக்கு, பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் பகுதி-I ல் "**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**" என்ற பிரிவில் 5 மதிப்பெண்களுக்கு கேட்கப்படும் வினாக்களை அதற்கான விடைகளுடன் தொகுத்து கீழே அளிக்கப்பட்டுள்ளது. இவற்றை முழுவதும் நீங்கள் அறிந்திருந்தால் உங்களுக்கு 5 மதிப்பெண்கள் உறுதி.

**பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

**இயல் - 1**

**1.**
**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

**வினாக்கள்:**

1. தென்னவன் மகள் யார்?
2. தென்னன் என அழைக்கப்படுபவன் யார்?
3. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகையை எடுத்தெழுதுக.
4. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள நூல்கள் யாவை?
5. நற்கணக்கே – பிரித்தெழுதுக.
6. இன்னறும் - இலக்கணக்குறிப்பு தருக.
7. இப்பாடலின் ஆசிரியர் யார்?
8. இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பிடுக.
9. இப்பாடல் இடம் பெற்ற தொகுதி யாது?

**விடைகள்:**

1. தமிழ்மொழி
2. பாண்டிய மன்னன்
3. தென்னன் - இன்னறும்
4. திருக்குறள், எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை
5. நன்மை + கணக்கே
6. பண்புத்தொகை
7. பாவலரேறு பெருஞ்சித்திரனார்
8. கனிச்சாறு



**C.RATHIKA M.A.,B.Ed.**
**NALANDHA INNOVATION SCHOOL**
**CUMBUM**
**CELL: 9842121539**

**2.**
**முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்**
**மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்**
**அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு**
**இணைகிடந்த தேதமிழ் ஈண்டு**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**வினாக்கள்:**

1. முத்தமிழ் என்பது யாது?
2. முச்சங்கம் - விரித்து எழுதுக.
3. கடல் தரும் மூன்று வகையான சங்குகள் யாவை?
4. துய்ப்பது – என்பதன் பொருள் யாது?
5. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகையை எடுத்தெழுதுக.
6. மெத்த அணிகலன் - இரு பொருள் தருக.

**விடைகள்:**

1. இயல், இசை, நாடகம்
2. முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்.
3. வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்.
4. கற்பது அல்லது தருதல்
5. முத்தமிழ் - மெத்த அணைகிடந்தே - இணைகிடந்தே
6. மெத்த + அணிகலன் - ஐம்பெருங்காப்பியம்

   மெத்த + வணிகலன் - மிகுதியான வணிகக்கப்பல்கள்

## இயல் - 2

3. **நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,**
**பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,**
**கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. நேமி என்ற சொல்லுக்கு பொருள் தருக.
4. தடக்கை இலக்கணக் குறிப்பு தருக.
5. இப்பாடலில் இடம் பெற்ற மன்னனின் பெயர் என்ன?

**விடைகள்:**

1. முல்லைப்பாட்டு
2. நப்பூதனார்
3. வலம்புரி சங்கு
4. உரிச்சொல்
5. மாவலி மன்னன்



**C.RATHIKA M.A.,B.Ed.**
**NALANDHA INNOVATION SCHOOL**
**CUMBUM**
**CELL: 9842121539**

## இயல் - 3

4. **அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்**
**சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி**
**நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்**
**மான விறல்வேள் வயிரியம் எனினே.**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகையை எழுதுக.
4. படுகர் - பொருள் தருக.
5. அடைந்திருந்த – பிரித்து எழுதுக.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**விடைகள்:**

1. மலைபடுகடாம்
2. பெருங்கௌசிகனார்
3. அலங்கு – சிலம்பு
4. பள்ளம்
5. அடைந்து + இருந்த

## இயல் - 4

5. **வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்**
**மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ**
**ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. நோயாளி ஏன் மருத்துவரை நேசிக்கிறார்?
4. மீளாத் துயர் - இலக்கணக் குறிப்பு தருக.
5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகையை எடுத்தெழுதுக.
6. மாயம் - பொருள் தருக.
7. ‘உனதருளே’ – பிரித்து எழுதுக.

**விடைகள்:**

1. பெருமாள் திருமொழி
2. குலசேகராழ்வார்
3. மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்த நோயாளி அவரை நேசிக்கிறார்.
4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
5. வாளால் - மாளாத
6. விளையாட்டு
7. உனது + அருளே

6. **விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்**
**கரு வளர் வானத்து இசையில் தோன்றி**
**உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;**
**உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்**



**C.RATHIKA M.A.,B.Ed.**
**NALANDHA INNOVATION SCHOOL**
**CUMBUM**
**CELL: 9842121539**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. அண்டம் எவ்வாறு தோன்றியது?
4. ‘வளர் வானம்’ - இலக்கணக்குறிப்பு தருக.
5. ‘ஊழி’ – என்பதன் பொருள் யாது?
6. ‘வளி’ – என்பதன் பொருள் யாது?
7. இப்பாடலில் அமைந்துள்ள அடி மோனையை எடுத்து எழுதுக.

**விடைகள்:**

1. பரிபாடல்
2. கீரந்தையார்
3. எதுவுமில்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குத் காரணமான கரு ( பரமாணு ) பேரொலியுடன் தோன்றியது.
4. வினைத்தொகை
5. யுகம்
6. காற்று
7. உரு – உந்து

**இயல் - 5**

7. **அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை**
**அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்**
**பொருத்துவதும் கல்வியென்றே போற்று**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது எது?
4. எதை நாம் அகற்றிட வேண்டும்?
5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகையை எடுத்தெழுதுக.
6. அருந்துணை - இலக்கணக்குறிப்பு தருக.
7. அருளைப் பெருக்கி, அறிவைத் திருத்துவது எது?
8. இப்பாடலில் போற்றப்படுவது எது?

**விடைகள்:**

1. நீதிவெண்பா
2. கா.ப. செய்குதம்பிப் பாவலர்
3. கல்வி
4. மயக்கத்தை ( மருளை ) நாம் அகற்றிட வேண்டும்.
5. அருளை – மருளை
6. கல்வி
7. கல்வி

**இயல் - 6**

8. **வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்**
**பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;**
**மையோ? மரகதமோ? மறிகடலோ? முழை முகிலோ?**
**ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலில் வந்துள்ள அடி எதுகையை எழுதுக.
3. இப்பாடலில் இராமனுடன் செல்பவர் யார்?
4. இப்பாடலில் கூறும் இராமனின் நிறங்கள் யாவை?
5. வெய்யோன் - பொருள் தருக.



C.RATHIKA M.A.,B.Ed.
NALANDHA INNOVATION SCHOOL
CUMBUM
CELL: 9842121539



C.RATHIKA M.A.,B.Ed.
NALANDHA INNOVATION SCHOOL
CUMBUM
CELL: 9842121539

**விடைகள்:**

1. கம்பராமாயணம்
2. வெய்யோன் - பொய்யோ
3. சீதை, இலக்குவணன்
4. கருமை, பச்சை, நீலம், கார்மேகம்
5. பகலவன்

## இயல் - 7

9. **மண்ணுள் வினைஞரும் மண்ணீட்டும் ஆளரும்**
**பொன்செய் கொல்லரும் நன்நலம் தருநரும்**
**துன்ன காரரும் தோலின் துன்னரும்**
**கிழியனும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. மண்ணுள் வினைஞர் - பொருள் தருக.
4. நன்கலம் - இலக்கணக்குறிப்பு தருக.
5. துன்னகாரர் யார்?

**விடைகள்:**

1. சிலப்பதிகாரம்
2. இளங்கோவடிகள்
3. ஓவியர்
4. பண்புத்தொகை
5. தையற்காரர்

10. **'பகர்வனர் திரிதிரு நகர வீதியும்;**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வனைக் காருகர் இருக்கையும்;**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்'**

**வினாக்கள்:**

1. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?
2. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
3. எதுகைச் சொற்களை எழுதுக.
4. 'காருகர்' – என்பதன் பொருள் தருக.
5. இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

**விடைகள்:**

1. சிலப்பதிகாரம்
2. பகர்வனர் - பட்டினும் - பருத்தி
3. காருகர் - இருக்கை – துகிரும் - அகிலும்
4. கைத்தொழில் வல்லுநரான நெசவாளர் ( சாலியர் )
5. குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப் புகைபொருள்கள், அகில்

11. **இயல் - 8**

**நின்றுகாவலட நெறிபூண்டு நெறியல்லது நினையாது**
**தந்தையில்லோர் தந்தையாகியுந் தாயரில்லோர் தாயராகியும்**
**மைந்தில்லொரு மைந்தராகியும் மன்னுயிர் கட்குயிராகயும்**
**விழிபெற்ற பயனென்னவும் மெய்பெற்ற அருளென்னவும்**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. தந்தைக்கு தந்தையாய் இருந்தவர் யார்?
4. இப்பாடலில் இடம் பெற்ற உறவு முறை யாது?
5. மைந்தரில்லாத – பிரித்து எழுதுக.

**விடைகள்:**

1. மெய்க்கீர்த்தி
2. இரண்டாம் இராசராச சோழன்
3. இராசராச சோழன்
4. தந்தை, தாய், மகன்
5. மைந்தர் + இல்லாத

12. **இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்**
**இவைதவ றாயின் எதிர்பதென் வேலை!**
**ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்**
**அவனும் யானுமே அறிந்தவை! அறிக!**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. இப்பாடலில் இடம் பெற்ற எதிர்ச்சொல்?
4. முத்தொழில்கள் யாவை?
5. இப்பாடலில் இடம் பெற்ற அடி எதுகைகளை எழுதுக.

**விடைகள்:**

1. காலக்கணிதம்
2. கண்ணதாசன்
3. சரி X தவறு
4. ஆக்கல், அழித்தல், காத்தல்
5. இவைசரி - இவைதவறு

**இயல் - 9**

13. **பூக்கையைக் குவித்துப் பூவே**
**புரிவொடு காக்கென்று அம்பூஞ்**
**சேக்கையைப் பரப்பி இங்கண்**
**திருந்திய அறத்தை யாவும்**
**யாக்கையைப் பிணித்தென்று ஆக**
**இனிதிலுள் அடக்கி வாய்ந்த**
**ஆக்கையை அடக்கிப் பூவோடு**
**அழுங்கணீர் பொழிந்தான் மீதே.**



C.RATHIKA M.A.,B.Ed.
NALANDHA INNOVATION SCHOOL
CUMBUM
CELL: 9842121539

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. இப்பாடலில் வந்துள்ள அடி எதுகையை எழுதுக.
4. யாக்கை – பொருள் தருக.
5. கருணையான் யாரை அடக்கம் செய்தான்?

**விடைகள்:**

1. தேம்பாவணி
2. வீரமாமுனிவர்
3. பூக்கை – சேக்கை – யாக்கை – ஆக்கை
4. உடல்
5. தன் தாயை

Padasalai



C.RATHIKA M.A.,B.Ed.
NALANDHA INNOVATION SCHOOL
CUMBUM
CELL: 9842121539